செ.வெ.எண்: 54/ பிப்ரவரி /2020 நாள்: 20.02.2020

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், சட்டம்-ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு தொடர்பாக காவல்துறை, வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறை அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.02.2020) சாலை பாதுகாப்பு குழுக் கூட்டம் நடைபெற்றது.

-------------

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், சட்டம்-ஒழுங்கு மற்றும் சாலை பாதுகாப்பு தொடர்பாக காவல்துறை, வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை ஆகிய துறை அலுவலர்களுடன் சாலை பாதுகாப்பு குழுக் கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஜியாவுல்ஹாக்.இ.கா.ப., காவல் துணை ஆணையர் திருமதி.என்.எஸ்.நிஷா.இ.கா.ப., (சட்டம் மற்றும் ஒழுங்கு), ஸ்ரீரங்கம் சார்-ஆட்சியர் திரு.சிபி.ஆதித்யாசெந்தில்குமார்இ.ஆ.ப.,அவர்கள், முசிறி சார் ஆட்சியர் திருமதி. ஜே.இ. பத்மஜா இ.ஆ.ப., ஆகியோர் முன்னிலையில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (20.02.2020) நடைபெற்றது.

திருச்சி மாநகரம் உறையூர் போக்குவரத்து ஒழுங்குபிரிவு எல்லைக்குட்பட்ட கருர்பைபாஸ் சாலையில் கே.டி.சந்திப்பு முதல் ரயில்வே மேம்பாலம் வரையிலும் சாலை குறுகலாக உள்ளது. சாலையின் இரண்டு புறங்களிலும் வாகனங்கள் செல்வதால் கடுமையான போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதோடு, அவ்வப்போது சாலை விபத்துகளும் அதனால் உயிரிழப்புகளும் ஏற்படுகிறது. விபத்துக்களை தடுக்கும் நோக்கிலும், கரூர்பைபாஸ் சாலையில் கே.டி.சந்திப்பு முதல் ரயில்வே மேம்பாலம் வரை சாலையை அகலப்படுத்தி சென்டர் மீடியன் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

திருச்சி மாநகரம் கோட்டை போக்குவரத்து ஒழுங்குபிரிவு எல்லைக்குட்பட்ட அண்ணாசிலை பகுதியில் சாலை குறுகலாக இருப்பதால் கடுமையான போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதோடு அவ்வப்போது சாலை விபத்துகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்படுகிறது. எனவே மேற்படி பகுதியில் போக்குவரத்து நெருக்கடியை குறைக்கும் வகையிலும், சாலை விபத்துகளை தவிர்க்கும் நோக்கிலும் அண்ணாசிலை ரவுண்டாணா அளவை குறைத்து சாலையை அகலப்படுத்தி தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

எம்.ஜி.ஆர்.நகர் சந்திப்பு முதல் உய்யகொண்டான் திருமலை பாலம் வரை வயலூர் ரோடு குறுகலாக உள்ளதால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதோடு, சாலை விபத்துக்களும், உயிரிழப்புகளும் ஏற்படுகிறது. போக்குவரத்து நெருக்கடி மற்றும் சாலை விபத்துக்களை குறைக்கும் வகையில் மாற்று வழித்தடம் கண்டறிந்து நடைமுறைபடுத்த வேண்டும். திருச்சி மாநகரம் ஸ்ரீரங்கம் போக்குவரத்து ஒழுங்குபிரிவு எல்லைக்குட்பட்ட திருவானைக்காவல் டிரங்க் ரோட்டில் அனுகுசாலை விரிவாக்க பணிகளை விரைந்து முடிக்க வேண்டும்.

மாம்பழச்சாலை பெட்ரோல் பங்க் எதிரில் போக்குவரத்திற்கு இடையூறாகவும், விபத்து ஏற்படுத்தும் வகையிலும் சாலையில் உள்ள மின் கம்பத்தை இடமாற்றம் செய்யவேண்டும்.ஸ்ரீரங்கம் மூலத்தோப்பு மேலவாசல் அருகில் சாலையின் நடுவில் உள்ள மின்கம்பத்தை இடமாற்றம் செய்ய வேண்டும். ஓயாமாரி மேம்பாலம், தென்னூர் மேம்பாலம், பாலக்கரை மேம்பாலம் ஆகிய பகுதிகளில் பாலத்தின் இணைப்புகளில் உள்ள இரும்பு ராடுகள் மேலே தூக்கி கொண்டு உள்ளன. இதனால் வாகனங்களில் செல்பவர்கள் தடுமாறி விபத்து ஏற்பட வாய்ப்புள்ளது இதனை சரிசெய்து தரவேண்டும்.

கே.கே.நகர் LIC காலணியிலிருந்து சாத்தனூர் செல்லும் சாலையில் மாநகர ஆயுதப்படை மற்றும் உழவர் சந்தை முன்பு வேகத்தடைகள் அமைக்கவேண்டும். பால்பண்ணை பகுதியில் தஞ்சாவூரிலிருந்து டி.வி.எஸ். டோல்கேட்டிற்கு திரும்பும் சர்வீஸ் சாலையின் முகப்புப்பகுதியில்

(Corner) சாலையை விரிவுப்படுத்த வேண்டும். மேலும் இவ்வளைவில் அச்சுறுத்தும் நிலையில் உள்ள HT Line மின்கம்பம் இடமாற்றம் செய்து தரவேண்டும். ஜி-கார்னர் சர்வீஸ் சாலை டி.வி.எஸ்.டோல்கேட்டில் வந்து சேரும் இடத்தில் புதுக்கோட்டை மார்க்கத்தில் சர்வீஸ் சாலையை விரிவுப்படுத்த வேண்டும்.

மன்னார்புரத்தில் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலக சாலை மற்றும் கே.கே.நகர் சாலை சந்திப்புப்பகுதி இருண்டு கிடப்பதால் அச்சாலை சந்திப்பில் High Mass விளக்கு நிறுவப்படவேண்டும். தற்போது குட்செட் மேம்பாலம் முதல் டி.வி.எஸ்.டோல்கேட் வரை ஆக்ரமிப்புகள் அகற்றப்பட்டு, விரிவாக்கம் செய்யப்பட்டுள்ள சாலையை சீரமைக்கப்படவேண்டும். செந்தண்ணீர்புரம் சாலை சந்திப்புக்கருகே சர்வீஸ் சாலை தொடர்ச்சியாக இல்லாமல், குறுக்கே பாலம் உள்ளதால் பிரதான சாலைக்கு சென்று பின்னர் மீண்டும் சர்வீஸ் சாலையை அடையும் வண்ணம் இருப்பதை மாற்றி, தொடர்ச்சியாக சர்வீஸ் சாலையில் செல்லும் வண்ணம் பாலம் அமைக்கப்படவேண்டும்.

இந்நிகழ்ச்சியில் காவல் துணை ஆணையர் திரு.சு.வேதரத்தினம் (குற்றம் மற்றும் போக்குவரத்து), மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.மு.வடிவேல்பிரபு, வருவாய் கோட்டாட்சியர்கள் திரு.ராமன், திரு.விஸ்வநாதன் (திருச்சி), சமூக பாதுகாப்புத்திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி. பழனிதேவி, அலுவலக மேலாளர் (குற்றவியல்) திரு.சிவசுப்பிரமணியம்பிள்ளை, மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

வெளியீடு :

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.